1981 ஏப்ரல் 4]

மணலி தாய்-சேய் நல விடுதி

வினா எண். 607— திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மணலி தாய்-சேய் நல விடுதியில் மருத்துவ வசதி இருக்கிறதா ?

(ஆ) இல்லையெனில் அந்த விடுதியை தேவையான வசதி களுடன் இயங்கவைக்க முயற்சி உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டென்மார்க் அரசு உதவியுடன் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம்.

* வினா எண். 608 திரு. செம்மலை : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டென்மார்க் அரசின் உதவியுடன் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் மக்கள் நலவாழ்வுத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் என்ன ?

(இ) இத்திட்டம் எத்தனை மாவட்டங்களில் செயல்படு கின்றது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ), (ஆ) மற்றும் (இ) ஆம். ஒரு திட்ட செயற்குறிப்பு டென்மார்க் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, இந்த டேனிட்டா திட்டம் எவ்வளவு காலத்திற்கு அங்கே செயல்படுத்தப்பட உள்ளது என்ற விவரத்தையும் இந்த திட்டத்திற்கான டென்மார்க் அரசு எந்த அளவுக்கு உதவித் தொகை வழங்கி இருகின்றது என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, டேனிஷ் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் ஏஜென்சி அதாவது டேனியா எகபது அவர்களால் நடத்தப்படுகின்ற ஒரு திட்டம், 5 ஆண்டுகளுக்கு சேர்த்து ஏற்படுத்தப்பட்ட